திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையில் தற்சமயம் ஒரு பகுதி மட்டும் ஸ்பின்னிங் பகுதி மட்டும் இயங்குகிறது. மீதி பகுதி இப்போது இயங்கவில்லை என்று சென்ற வாரத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அறிவிக்கப்பட்டதாக அறிகிறேன். அந்த நிலையை மாற்றி அந்தத் தொழிற்சாலையை லாபகரமாக நடத்துவதற்கு மீதி பகுதியையும் இணைத்து வைத்தால் அங்கே பிளீச்சிங் செக்ஷன், டையிங் செக்ஷன் இருக்கிறது. சாயப் பட்டறை இருக்கிறது. இது ஒரு மேஜரான தொழிற்சாலை, அதன் மூலம் இருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க தமிழகத்தில் ஒரு முதல்தரமான தொழிற்சாலையாக நடத்த முடியும். அத்தகைய நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத்தொழிற்சாலையை முழுமையாக இணைத்து இயங்க வைத்து விரைவாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேட்டூர் மில் மட்டும் அல்ல. 6 மில்களையும் விரைவாக திறப்பதற்கு இந்த அரசு முழு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை தெரிவித்துச் கொள்கிறேன்.

4 விதி 111-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

திரிசூலம் பகுதியில் கல்குவாரி எடுக்கப்படுவது பற்றி உறுப்பினர் திரு, குமரி அனந்தன் தெரிவித்துள்ளது குறித்து விளக்கம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 111—கீழ் இப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையினைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28-3—90 அன்று நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் இங்கே உரையாற்றிய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் குமரிஅனந்தன் திரிசூலத்திலே கல்குவாரியிலே தவறு நடைபெற்றதாக குறிப்பிட்டபோது அதுகுறித்து விசாரித்து இந்த அவையில் விளக்கம் தருவதாகக் கூறி இருந்தேன். அது பற்றிய விவரம் வருமாறு:

திரிசூலத்தில் உள்ள புல எண். 85/1ல் 37.07 ஏக்கர் நிலப் பரப்பு உள்ள கல்குவாரி அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ளது. சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் 2 கல்குவாரிகளை 26.4.1981 முதல் 10 ஆண்டுகளுக்கு தனது கல் தேவைகளுக்காக குத்தகைக்கு எடுத்து இருந்தது. தனது கற்கள் தேவை முடிவுற்றதும் 25.4.86 அன்று இந்தக் கல் குவாரிகளை மீண்டும் அரசிடம் ஒப்படைத்தது, இந்தக் கல்குவாரிகளை செங்கை-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் 30.6.1986ல் இருந்து அரசுப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டார்.

[1990 ஏப்ரல்—3,]

தந்தை பெரியார் தாழ்த்தப்பட்டோர் கல் உடைக்கும் தொழிலாளர் சங்கம், செங்கை—அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவருக்கு திரிசூலம் குவாரியிலேயிருந்து, விழுந்து கிடக்கும் சக்கைக் கற்களை அப்புறப்படுத்துவதற்காக தற்காலிக அனுமதி கோரியிருந்தது. பரிசீலனைக்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் 5.9.1989 தேதியிட்ட ஆணையின்படி இந்தச் சங்கத்திற்கு 35 லாரி சுமையுள்ள, விழுந்து கிடக்கும் சக்கைக் கற்களை 30 நாட்களுக்குள் எடுத்துச் செல்ல தற்காலிக அனுமதியைச் சில நிபந்தனைகளோடு வழங்கினார். சங்கம் அனுமதி பெற்று கற்களை எடுத்துக் கொண்டு போகத் தொடங்கிய சில நாட்களுக்குள்ளாகவே அந்தச் சங்கம் நிபந்தனைகளை மீறி விட்டதாக ஒருசிலர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் செய்ததன் பேரில் 9—9—1989 அன்று மாவட்ட ஆட்சித்தலைவரே நேரில் சென்று பார்வையிட்டு, சில நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பதை அறிந்து 12-9-1989அன்று தற்காலிக அனுமதியை ரத்து செய்தார். அதை எதிர்த்து அந்தச் சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் 5-10-1989 அன்று இடைக்காலத் தடை ஆணை பெற்றது. இந்தச் இடைக்காலத் தடை ஆணையை மீண்டும் உயர்நீதி மன்றம் 3-11-1989ல் நீக்கியது. தடையிருந்த இடைக்காலத்திலே இந்த சங்கம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 35 லாரி சுமைகளைக் கொண்டு போக முதலில் அனுமதித்து இருந்த 30 நாட்கள் என்பதை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் காலநீட்டிப்புத் தர மறுத்து விட்டார்; தரப்படவில்லை.

10—25மணி

மேலும் கள்ளத்தனமாகக் குவாரி செய்யப்படுகிறதா என்று கண்காணிக்க அவ்வப்போது வருவாய்த்துறைப் பணியாளர்களால் சோதனையிடவும் ஏற்பாடு செய்யப்பட்டது, காவல்துறை கண்காணிப்பும் போடப்பட்டு அது இதுவரை தொடர்ந்து இருந்து வருகிறது. இதன்காரணமாக இப்போது அங்கே குவாரி எதுவும் நடைபெறுவதாகப் புகார் இல்லை. எனினும் அங்கே பணியிலிருந்த வருவாய்த்துறை ஆய்வாளர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். நீதிமன்றத் தடை ஆணை பெற்றிருந்த காலத்திலே கூட 35 லாரிகளுக்கு மேற்படாமல் கற்கள் எடுத்துச் செல்வதை கண்காணிக்க வருவாய்த்துறை அதிகாரிகள் அதிகாரம் பெற்றிருந்தார்கள். திரிசூலம் கிராமத்திலே அண்ணா அரிஜன புளூமெட்டல் தொழில் கூட்டுறவுச் சங்கம் 42.40 ஏக்கரில் 14-2-91 வரையிலும், மீனம்பாக்கம் ஆதிதிராவிடர் குவாரி தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் 9.45 ஏக்கரில் 19—7—1989 முதல் 3 ஆண்டுகள் வரையிலும், இலங்கை அகதிகள் தொழிலாளர் நலன் மற்றும் சேவை சங்கம் 9.45 ஏக்கரில் 30-6—1990 வரையிலும் குவாரி செய்ய குத்தகை உரிமங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

சென்னை, துறைமுகப்பொறுப்பு கழகத்தின் தலைமைப்பொறியாளர், எட்டாவது திட்டகாலத்தில் பல முக்கியப் பணிதுறைகள் மேற்கொள்ள இருப்பதாலும், எண்ணூரில் ஓர் துணைத்

துறைமுகம் ஏற்படுத்தப்பட இருப்பதாலும் தங்களுக்கு திரிசூலத்திலேயுள்ள கற்குடைவு உள்ளிட்ட, மேலும் 3 கற்குடைவுகள் 10 ஆண்டு கால குத்தகை அடிப்படையிலே வேண்டுமெனக்கோரியிருக்கிறார். இது இப்பொழுது அரசின் பரிசீலனையிலே உள்ளது.

மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள, அன்னை இந்திரா கூட்டுறவுச் சங்கம், அண்ணா அரிஜன கருங்கல் ஜல்லி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், மீனம்பாக்கம் ஆதிதிராவிடர் குவாரி தொழிற் கூட்டுறவுச் சங்கம் போன்றவைகளுக்குக் குத்தகை வழங்க வேண்டுமென அந்தச்சங்கங்கள் தந்த மனுவினை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். இவற்றிலே இரண்டுக்கு ஏற்கனவே வேறு இடங்களிலே கல் குத்தகை வழங்கப்பட்டிருக்கிறது. துறைமுகப் பொறுப்புக் கழகம் அதனுடைய தேவைகளுக்காக மீண்டும் இதனைக் கோரி இருப்பதால் நாட்டு பொது நலனைக் கருத்திலே கொண்டு அவர்களுக்கே இதை வழங்கிவிடலாம் என்ற எண்ணமும் அரசுக்கு உள்ளது, மேலும் மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் பேசும்பொழுது, 500 லாரி கற்கள், 63 லட்சம்ரூபாய் கற்கள் எடுத்துச் சென்றதாக இங்கே கூறினார்கள். அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையில் சக்கைக் கற்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட காலத்தில் அதாவது 5-9-1989 முதல் 12-2-89 வரையிலும், பின்னர் தடைஆணை இருந்த 5 10-1989 முதல் 3-11-1989 வரையிலும், ஆக 37 நாட்களில் நாளொன்றுக்கு 500 லாரி கற்கள் எடுத்துச் செல்வது என்பது இயலாத செயல் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்து உள்ளார்.

10-30 மணி

அது மாத்திரமல்ல நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, டாக்டர் கலைஞர் பேக்வர்டு கூட்டுறவுச் சங்கம் என்றும், டாக்டர் கலைஞர் தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவுச் சங்கம் என்றும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதைத் தெரிவித்த அவர், நல்லவேளையாக அந்தச் சங்கங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏதும் சலுகை செய்வதாகத் தெரிவிக்கவில்லை. நானும் அதுபற்றி விசாரிக்கச் சொன்னேன். எந்தச் சலுகையும் தரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்குரிய விளக்கமாக இதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. விதி 110ன் கீழ் செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கைகள்

(அ) மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் ஒப்பந்தத் தொழிலாளர் பணி பற்றி உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே எழுப்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்! பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு அறிக்கைகளைப் படைப்பார்கள்,